1978 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்த விழா வல்வில் ஓரி நினைவாக நடத்தப்படுகிறது. சிறப்புரை ஆற்றுதல், பட்டி மன்றம் நடத்துதல், கவி அரங்கம் நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற மக்களால் பாராட்டப் படுகின்ற அளவுக்குத் தான் விழா நடைபெற்று வருகிறது.

திரு. க. அறிவழகன்: வல்வில் ஓரியை வில்வித்தையில் மிக முக்கியமானவராகக் கருதுகிறார்கள், ஆகவே வில்வித்தையிலே சிறந்தவர்களாக இருப்பவர்களுக்குப் பரிசு கொடுப்பதாக இருந்தால் அந்த மலைப்பகுதியில் வாழும் மக்களுக்கு அது உற்சாகத்தைக் கொடுப்பதாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை அரசு செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நாம் வில்வித்தைக்குப் போக வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா என்று தெரிந்து கொண்டால், அதற்குப் பிறகு அரசு அதைப்பற்றி முடிவு எடுக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

Physical Education Teachers.

* 3 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the proposal to sanction incentive increments to Higher Physical Education Teachers possessing B.P.Ed., has been pending consideration by the Government; and

(*b*) if so, the stage at which the matter now stands?

உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உடற்பயிற்சிக் கல்வியில் பட்டம் பெற்ற உயர்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும் செயற் குறிப்பு முடிவாகாமல் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இச்செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இது பற்றிய பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசாணை 42, தேதி 10-1-69 லேயே வழங்கப்பட்டு விட்டது. அதில் இருந்த தகுதி எப்படி இருந்தது?

டிப்ளமாஇன்பிசிகல் எடுகேஷன் பெற்றிருந்தால், முதல்நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் ஊக்க ஊதியம பெறலாம் என்று இருந்தது. அதற்குபின் சர்வகலாசாலை படிப்பு, பேட்சிலர் ஆப் பிசிகல் எடுகேஷன் என்று மாற்றிய காரணத்தினாலே, இந்தத் தகுதி பெற்றருவுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரை வருவதற்கு முன் இதை அமுல் படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது அரசின் பரிசீலனை யில் இருக்கிறது என்று நான் சொன்னது, அவர்கள் பெறுகின்ற அதிகத் தகுதியானது, அவர்கள் செய்கின்ற பணிக்கு மேலும் பயன் தருமா என்றுதான் பரிசீலிக்கிறோம். அப்படி இருக்கு மானால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: இப்போது பி. எட். பட்டம் பெற்ற வர்கள் உயர்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களாக பணியாற்றி வருகி றார்கள். அவர்களில் ஏராளமானவர்கள் டிப்ளமா இன் பிசிகல் எடுகேஷன் பாஸ் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை. நம் ஆளுநர் உரையின்படி, 916 ஹையர் செகண்டரி பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பட்டம் பெற்றவர் களுக்குப் பதவி உயர்வு, உயர் சம்பளம் கிடைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்க நாயகம்: தலைவர் அவர்கள் அதற்குத் தனியாக நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. க. அறிவழகன்: கல்வி அமைச்சரவர்களுக்கு பாராட்டு சொல்ல வேண்டும். ஏனென்றால் ஊதியக் குழுவிடம் இதைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லாமல், இதற்கு பதில் சொன்னார்கள். அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, அவர்கள் உயர் பட்டப் படிப்பு பெற்றிருக்கிறார்கள், அது அவர்கள் பணிக்குப் பயன்படுமா என்கிற அச்சம் இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் பெற்றிருக்கிற பட்டம் அவர்கள் பணிக்குப் பயன்படுமென்று முடிவு செய்து, அவர்களுக்கு ஆதரவான முறையில் அரசு செயற்குறிப்பு தயார் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்த அடிப்படையிலே தான் அது பரிசீலிக்கப்படுகிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசாணை 42-ன்படி Diploma in Physical Education படித்தவர்கள் இன்று ஊக்க ஊதியம் பெறுகிறார்கள். ஆனால் Bachelor of Physical Education பட்டம்

பெற்றவர்களுக்கு இல்லையென்று கூறுகிறார்கள். எனவே இந்த இரண்டு தகுதிகளும் சமமா? அப்படி சமமாக இருந்தால், உடனடியாக Bachelor of Physical Education பட்டம் பெற்றவர்களுக்கும் ஊக்க ஊதியம் அளிக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பரிசீலனை முடிந்தவுடன் உடனடியாக அமுலுக்கு வரும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். பொதுவாக பரிசீலிக்கப்படுகிறதென்றால், அதற்கு ஒரு கால நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட அனுபவங்கள் கடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன. எனவே பரிசீலிக்கப்படுகிறதென்றால், இதற்கு ஒரு காலத்தை நிர்ணயித்து அதற்குள் முடிவெடுக்க நிர்வாகம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இப்பிரச்சினை குறித்த பரிசீலனை எத்தனை மாதங்களில் முடிவடையும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி ஒரு கட்டுப்பாட்டை அரசு தனக்கு விதித்துக்கொள்ளாது.

* 4 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received from the Physical Education Teachers Association to merge Grade I and Grade II categories of teachers ; and

(*b*) if so, the action taken thereon ?

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தரம் I தரம் II வகை ஆசிரியர்களை ஒன்றிணைக்கக் கோரி, உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து முறையீடு ஏதும் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.